12ஆம் வகுப்பு

# மார்ச் வினாத்தாள் - 2020
## தமிழ்

நேரம் : 3.00 மணி (விடைகளுடன்) மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும், அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** [14 × 1 = 14]

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல் :
அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ
இ) காவ்யதர்சன் ஈ) துறைமுகம்

2. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
அ) வேளாண் கருவி ஆ) போர்க்கருவி
இ) தச்சுக்கருவி ஈ) இசைக்கருவி

3. மாதவி பெற்ற பட்டம் :
அ) நாட்டியப் பேரொளி ஆ) நர்த்தகி
இ) தலைக்கோலி ஈ) நாட்டியமயூரி

4. புயலுக்குப் பெயர் வைக்கும் கூட்டமைப்பு நாடுகள் :
அ) பத்து நாடுகள் ஆ) எட்டு நாடுகள்
இ) ஐந்து நாடுகள்
ஈ) பதினெட்டு நாடுகள்

5. த.ந. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் :
அ) கிறித்துவமும் தமிழும்
ஆ) பௌத்தமும் தமிழும்
இ) இசுலாமும் தமிழும்
ஈ) சமணமும் தமிழும்

6. இராமலிங்க அடிகள் இயற்றிய நூல் :
அ) திருவருட்பா ஆ) திருவாசகம்
இ) திருக்குறள் ஈ) திருமந்திரம்

7. 'காய்நெல்' - இச்சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு:
அ) உம்மைத்தொகை
ஆ) பண்புத்தொகை
இ) வினைத்தொகை
ஈ) உவமைத்தொகை

8. முதல் கல் - என்னும் சிறுகதையின் ஆசிரியர் :
அ) குலோத்துங்கச் சோழன்
ஆ) உத்தம சோழன்
இ) இராசராச சோழன்
ஈ) இராசேந்திர சோழன்

9. பிழையற்ற தொடரைக் கண்டறிக.
அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்.
ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது.
இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது.
ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.

10. சுரதா நடத்திய கவிதை இதழ்:
அ) விண்மீன் ஆ) இலக்கியம்
இ) காவியம் ஈ) ஊர்வலம்

11. 'பொய்யா வானம்' - இலக்கணக் குறிப்பு தருக.
அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
ஆ) வினைத்தொகை
இ) உரிச்சொல் தொடர்
ஈ) பெயரெச்சத் தொடர்

12. அருங்கானம் - புணர்ச்சி விதி தருக.
அ) ஈறுபோதல், தன் ஒற்று இரட்டல்
ஆ) ஈறுபோதல்
இ) ஈறுபோதல், இனமிகல்
ஈ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்

13. மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?
அ) தொன்மம் ஆ) குறியீடு
இ) படிமம் ஈ) அங்கதம்

14. காப்பியம் எத்தனை வகைப்படும்?
அ) மூன்று ஆ) இரண்டு
இ) நான்கு ஈ) ஐந்து

### பகுதி - II - பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** [3 × 2 = 6]

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16. விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு நடுங்கியதாக நக்கீரர் கூறுகிறார்?

17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.

18. வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு யாது?



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com



**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** [2 × 2 = 4]

19. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு வரைக.

20. சென்னையை அலங்கரித்த ஆறுகளை எழுதுக.

21. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** [7 × 2 = 14]

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ.
    ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு?
    எலியும் பூனையும் போல

23. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும், சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.
    அ) முன் <
    ஆ) தானே <

24. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.
    தின்மை - திண்மை

25. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
    அ) பனைமட்டையில் கூரை வைத்திருந்தனர்.
    ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

26. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக.
    அ) அச்சாணி இல்லாத தேர் போல
    ஆ) நகமும் சதையும் போல

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.
    ஆ) புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்கான அடிப்படை தேவையாகும்.

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) அமர்ந்தனன் ஆ) செய்த

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) எத்திசை ஆ) செந்தமிழே

30. ஈரசைச் சீர்கள் எத்தனை? அவை யாவை?

**பகுதி - III - பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** [2 × 4 = 8]

31. "ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. அதிசயமலரில் பூச்செடி எவ்வாறு முளைத்துள்ளதாக தமிழ்நதி கூறுகிறார்?

33. அதியமானின் ஈகைப் பண்பை சிறுபாணாற்றுப்படை வழிநின்று விளக்குக.

34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** [2 × 4 = 8]

35. கலைமுழுமை என்றால் என்ன? விளக்குக.

36. பேரிடர் மேலாண்மை வாரியம் - விளக்குக.

37. சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** [3 × 4 = 12]

39. ஏகதேச உருவக அணி (அல்லது) தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

41. அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக் கூறுவன யாவை?

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
    அ) ஊழி பெயரினும் தாம் பெயரார் (அல்லது)
    ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

43. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |

பத்துப்பாட்டு

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப் படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

**பகுதி - IV** [3 × 6 = 18]

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.
    (அல்லது)
    ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்துவக் கம்பர்' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
    (அல்லது)
    ஆ) சங்ககால கல்வெட்டை அறிந்துகொள்ள புகழூர் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

www.surabooks.com



**46.** அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

(அல்லது)

ஆ) 'நடிகர் திலகம்' என்ற பட்டம் சிவாஜிக்குப் பொருத்தமானதே என்பதை நிறுவுக.

**பகுதி - V**

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** [4 + 2 = 6]

**47.** அ. 'துன்பு உளது' - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ. 'செயல்' என முடியும் குறள்.

☆ ☆ ☆

## விடைகள்

1. ஆ) நிலவுப் பூ
2. ஈ) இசைக்கருவி
3. இ) தலைக்கோலி
4. ஆ) எட்டு நாடுகள்
5. அ) கிறித்துவமும் தமிழும்
6. அ) திருவருட்பா
7. இ) வினைத்தொகை
8. ஆ) உத்தம சோழன்
9. அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்.
10. இ) காவியம்
11. அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
12. இ) ஈறுபோதல், இனமிகல்
13. ஆ) குறியீடு
14. ஆ) இரண்டு
15. (i) கடினமான வேலைகளைச் செய்யும் தொழிலாளர்களின் கைகள், மாலை நேரத்தில் சூரியனின் செந்நிறக் கதிர்களால் சிவந்திருக்கிற வானத்தைப் போல் சிவந்து காணப்படும்.

    (ii) தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம் அவர்களின் பருத்த தோள் மீது முத்துகள் சிதறியது போன்று காணப்படும். இவற்றையெல்லாம் வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்று கவிஞர் சிற்பி கூறுகிறார்.
16. குளிர் மிகுதியால், விலங்குகள் மேய்ச்சலை மறந்தன; குரங்குகள் உடல் குறுகிக் கிடந்தன; மரங்களில் இருந்து பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன; பால் குடிக்க வரும் கன்றுகளை பசுக்கள் உதைத்துத் தள்ளின. இவ்வாறாக பறவைகள், விலங்குகள் குளிர் மிகுதியால் நடுங்கியதாக நக்கீரர் கூறுகிறார்.
17.

| வசனம் | கவிதை |
|---|---|
| எதுகை, மோனை நயங்கள் இல்லாமல், அடியளவை அறிந் திடாமல் எழுதுகின்ற எளிய வடிவமே **வசனம்** ஆகும். | யாப்பிலக்கண விதிகளுக்கு உட்பட்டு சீர், அசை, தளை, அடி, தொடை பாவகை இவற்றைக் கொண்டு இயற்றுவது **'கவிதை'** ஆகும். |

18. யானையானது வயலில் தனித்து விடுவதால் அது உண்ணும் நெல்லின் அளவை விட, அதன் கால்களால் மிதிபட்டு அழியும் நெல்லின் அளவு அதிகமாக இருக்கும்.
19. **புக்கில்:** தற்காலிகமாக தங்குமிடம் புக்கில் என்று புறநானூறு குறிப்பிட்டுள்ளது.

    **தன்மனை:** திருமணத்திற்குப் பின் கணவனும், மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் தன்மனை என்று சங்க இலக்கியம் குறிப்பிட்டுள்ளது.
20. கொற்றலையாறு, கூவம், அடையாறு, பாலாறு.
21. பின்னணி இசை, திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக்கொண்டு வந்து காட்சி அமைப்பிற்கு உயிரூட்டுகிறது.

    **சான்று :** ஒரு பெண் சன்னல் வழியாக தெருவைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்போது ஒரு மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுகிறது. தெருவோ மகிழுந்தோ காட்டப்படவில்லை. ஒலியின் குறிப்பிலிருந்து அவளைப் பார்க்க வந்தவர் புறப்பட்டுவிட்டதை அறிய முடிகிறது.
22. அ) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.

    ஆ) வீட்டருகில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கே அழைத்துச் சென்றார்?
23. அ) முன் - அவன் முன்வந்து கூறினான்.

    அவன்முன் வந்து கூறினான்.

    ஆ) தானே - கண்ணன் தானே எல்லாப் பணிகளையும் செய்தான்.

    கண்ணன்தானே எல்லாப் பணிகளையும் செய்தான்.
24. பிறர்க்குத் **தின்மை** செய்வதை நிறுத்தி அவர்களின் மனத்**திண்மை**யை உயர்த்து.

    (தின்மை - தீமை, திண்மை - உறுதி)
25. அ) பனை **ஓலை**யால் கூரை **வேய்ந்திருந்தனர்.**

    ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் **குருளையும்** யானைக் **கன்றும்** கண்டேன்.
26. அ) சான்றோரின் வழிகாட்டுதல் இல்லை என்றால் **அச்சாணி இல்லாத தேர்போல** மக்கள் நல்வழியில் செல்ல இயலாமல் துன்புறுவர்.

    ஆ) கமலாவும் கீதாவும், **நகமும் சதையும் போல** இணை பிரியாத தோழிகளாக இருந்தார்கள்.
27. அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது.

    ஆ) புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்த கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.
28. அ) அமர்ந்தனன் - அமர் + த்(ந்) + த் + அன் + அன்

    அமர் - பகுதி

    த் - சந்தி (ந் ஆனது விகாரம்)

    த் - இறந்தகால இடைநிலை

    அன் - சாரியை

    அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

    ஆ) **செய்த – செய் + த் + அ**

    செய் - பகுதி

    த் - இறந்தகால இடைநிலை

    அ - பெயரெச்ச விகுதி

www.surabooks.com



29. அ) **எத்திசை – எ + திசை**

**விதி: எ + திசை –** 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்ற விதிப்படி **எ + த் + திசை** என்றாகி '**எத்திசை**' என்று புணர்ந்தது.

ஆ) **செந்தமிழே – செம்மை + தமிழே**

**விதிகள்:** செம்மை + தமிழே

'**ஈறு போதல்**' விதிப்படி 'மை' விகுதி கெட்டு 'செம் + தமிழே' என்றானது. '**முன்னின்ற மெய் திரிதல்**' என்ற விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான 'த' விற்கு இனமான 'ந்' என்ற எழுத்து தோன்றி 'செந்தமிழே' என்றானது.

30. ஈரசை சீர்கள் இரண்டு வகைப்படும். அவை மாச்சீரும், விளச்சீரும். (தேமா, புளிமா; கூவிளம், கருவிளம்).

31. **இடம் :** 'தண்டியலங்காரம்' என்ற அணியிலக்கண நூலில் பொருளணியில் இந்த அடியானது இடம் பெற்றுள்ளது.

**பொருள் :** மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோர்களால் (உயர்ந்தோர்) வணங்கப்படுகின்ற கதிரவன், ஓசை நிறைந்த கடல் நீரால் சூழப்பட்டுள்ள இந்த உலகத்தின் புற இருளை நீக்குகிறது.

**விளக்கம் :** மலையில் தோன்றி சான்றோரால் வணங்கப்படுகின்ற, இருளைப் போக்குகின்ற பொருள்கள் இரண்டு உள்ளன. ஒன்று மின்னலைப்போல் ஒளிர்கின்ற கதிரவன். மற்றொன்று பொதிகைமலையில் தோன்றி, வளர்ந்த, மக்களின் அறியாமை என்னும் இருளைப் போக்குகின்ற தனக்கு நிகரில்லாத தமிழாகும்.

32. போருக்குப்பின், ஆட்களற்ற பொழுதில் மரங்களற்ற பொட்டல் வெளியில் உலவிய யானைகளின் எச்சத்திலிருந்த விதையின் மூலமாக அதிசயமலரின் அந்தப் பூச்செடி பூத்திருக்கலாம்.

யாரோ ஒருவரின் காலணியின் பின்புறம் ஒட்டிக் கிடந்த விதை மண்ணில் விழுந்து அந்தச் செடியாக முளைத்திருக்கலாம், என்கிறார் தமிழ்நதி.

33. நறுமணம் கமழும் பெரிய மலைச்சாரலில் இருந்த அழகுமிக்க நெல்லி மரத்தின் கனி, உயிர் நிலைப்பெற்று வாழ உதவும் அமுதத்தின் தன்மையுடையது. அது தனக்குக் கிடைக்கப் பெற்றபோது, அதனை (தான் உண்ணாமல்) ஔவைக்கு வழங்கியவன் அதிகன் என்னும் வள்ளல்; வலிமையும் சினமும் ஒளியும்மிக்க வேலினை உடையவன்: கடல் போன்று ஒலிக்கும் படையினையும் உடையவன்.

34. **நாட்டிய அரங்கின் அமைப்பு :**

(i) திறம்படக் கற்றுணர்ந்த சிற்ப நூலாசிரியரால் சொல்லப்பட்ட இயல்புகளில் இருந்து மாறுபடாத நல்ல நிலத்தை ஆடல் அரங்கிற்காகத் தேர்ந்தெடுத்தனர்.

(ii) பொதிகை மலை போன்ற மலைகளிலே நீண்டு வளர்ந்த மூங்கில்களிலே ஒன்றுக்கு ஒன்று இடையே ஒரு சாண் அளவு கணுக்களைக் கொண்ட மூங்கிலைக் கொண்டு வந்தனர். நூல்களில் கூறப்பட்ட முறையாலே அரங்கம் அமைத்தனர்.

(iii) தம் கைப்பெருவிரலில் இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாக அம்மூங்கிலை வெட்டினர். அதை அரங்கம் அமைக்கும் கோலாகக் கொண்டு அதில் ஏழு கோல் அகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.

(iv) அரங்கில் தூணிற்கு மேல் வைத்த உத்திரப் பலகைக்கும் தளத்தில் இருக்கும் பலகைக்கும் இடையே, இடைவெளி நான்கு கோல் அளவாக இருந்தது. அரங்கின் உள்ளே செல்லவும் வெளியே வரவும் ஏற்ற அளவுகளுடன் இரு வாயில்கள் அழகாக அமைக்கப்பட்டிருந்தன.

(v) மேல்நிலை மாடத்தில் ஐம்பூதங்களைச் சித்தரித்து வைத்தனர். தூண்களின் நிழலானது, அவையிலும் நாடக அரங்கிலும் விழாதபடி நல்ல அழகான நிலைவிளக்குகளை நிறுத்தினர்.

(vi) ஒருமுகத்திரை, பொருமுகத்திரை, கரந்துவரல் திரை இவை மூன்றையும் சிறப்புடன் அமைத்தனர். ஓவிய வேலைப்பாடுமிக்க மேல் விதானத்தையும் அமைத்தனர். அத்துடன் சிறந்த முத்துகளால் இயன்ற மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்கிவிட்டனர். இவ்வாறு ஒவ்வொன்றையும் புதுமையாக, மேடையில் சிறப்பான வேலைப்பாடுகளுடன் அமைத்தனர்.

35. **அறம், பொருள், இன்பம்** ஆகிய மூன்று பயன்களும் இருக்கும்படியாக இலக்கியம் உருவாக்கப்பட வேண்டும் என்று தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார். இது **கலை முழுமை** எனப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் அகத்திணையும் புறத்திணையும் பாடற்பொருளாக அமைந்துள்ளன. **தொல்காப்பியம்** அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் கருத்துகளோடு இணைத்துள்ளது. தொல்காப்பியத்தில் வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய நான்கு பாவகைகளும் குறிப்பிடப்பட்டு, அதனுடன் அறவியல் கருத்துகளும் இணைக்கப்பட்டுள்ளன.

"அந்நில மருங்கின் அறமுதலாகிய
**மும்முதற் பொருட்கும்** உரிய என்ப"

(தொல். செய்யுளியல்)

மும்முதற் பொருள் என்பது அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுமாகும்.

36. (i) நடுவண் அரசு 2005-ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

(ii) புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது. இதற்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(iii) மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர் காலங்களில் செயலாற்ற, பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.

37. (i) ஆரம்ப காலங்களில் சென்னையில் நடந்து செல்லும் பாதைகளாகவும், மாட்டு வண்டிகள் சென்றுகொண்டிருந்த பாதைகளாகவும் இருந்தவையெல்லாம் ஆங்கிலேயரின் குடியிருப்புகளை முன்னிட்டு சாலைகளாக மாறின.

(ii) அண்ணாசாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை போன்ற பல சாலைகள் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

(iii) சென்னையில் 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து எழும்பூர் தொடர்வண்டி நிலையம், சென்னை மத்திய தொடர்வண்டி நிலையம் ஆகியவை உருவாயின.

(iv) 19ஆம் நூற்றாண்டில் பெரும் வளர்ச்சியடைந்த சென்னை துறைமுகமும், பன்னாட்டு விமான நிலையமும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை ஆகும்.

38. (i) மயிலை சீனி. வேங்கடசாமி 16-12-1900 ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். இவரின் தந்தை சீனிவாசன் ஒரு சித்த மருத்துவர். இவரின் தமையனார் கோவிந்தராசன் ஒரு தமிழாசிரியர்.

(ii) தந்தையின் சித்த மருத்துவப் பின்புலம், தமையனாரின் தமிழ்ப் பின்புலம் ஆகியவையே இவரை வரலாற்றாய்வாளராக உருவாக்கியது. இவர் தொடக்கப் பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

(iii) விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க, தெ.பொ.மீ, ச.த.சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக இவரது ஆய்வுக் கட்டுரைகள் குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி முதலான இதழ்களில் வெளியாகின.

(iv) சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு முதலான பல துறைகளிலும் இவர் கவனம் செலுத்தினார்.

(v) தமிழ்ப் பண்பாட்டிலும் தமிழர் வரலாற்றிலும் ஆழ்ந்த அக்கறை கொண்ட மயிலை சீனி. அவர்கள் தமிழ் பண்பாட்டின் தனித்தன்மையை நிறுவுவதில் உறுதியான பார்வை கொண்டவர்.

(vi) தம் வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர். நாம் தாழாமல் இருக்கத் தம்மைத் தாழ்த்திக் கொண்டவர். நமது பெருமைகளை ஆய்வு நோக்கில் விரித்துரைத்தவர். நமது சுய அடையாளங்களை மீட்டு தந்தவர்.

39. **அணி விளக்கம் :** செய்யுளில் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு, அதற்குத் தொடர்புடைய மற்ற பொருள்களை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது **ஏகதேச உருவக அணி**யாகும்.

**எடுத்துக்காட்டு:**

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்

**அணிப்பொருத்தம் :** ஏமப்புணை என்பதற்கு பாதுகாப்பான தெப்பம் என்பது பொருளாகும். 'இனம் என்னும் ஏமப்புணை' என்று உருவகப்படுத்திவிட்டு அதற்குத் தொடர்புடைய பாதுகாப்பான உறவினர்கள் (அ) சுற்றத்தார் என்று கூறாமல் விட்டுவிட்டதால் இது ஏகதேச உருவக அணியாகும்.

(அல்லது)

**அணி இலக்கணம் :** ஒரு பொருளின் தொழிலுக்கு மற்றொரு பொருளின் தொழிலைக் காரணம் காட்டி உவமை கூறுதல் **தொழில் உவமையணி** எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்.

**தொழில் உவமை சான்று :**

மன்னரைச் சார்ந்து பணி செய்வோர் - குளிர் காய்பவருக்கு ஒப்பானவர்.

கூடுதல் நெருக்கம், விலக்கம் கூடாது.

**குறள் விளக்கம் :** மன்னரைச் சார்ந்து பணி செய்வோர் அவரை விட்டு அதிகமாக விலகி விடாமலும், அதிக நெருக்கம் காட்டாமலும், நெருப்பின் முன்னே அமர்ந்து குளிர் காய்பவரைப் போல இருக்க வேண்டும்.

40. பாடு + ஆண் + திணை = பாடாண்திணை. பாடப்படும் ஆண்மகனது புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**சான்று :**

**வாயி லோயே! வாயிலோயே!**
**வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்**

**விளக்கம் :** ஔவையாரின் பாடலில் நெடுமான் அஞ்சியின் வீரத்தைப் பற்றியும், அவன் கொடைச் சிறப்பைப் பற்றியும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளதால் இப்பாடல் பாடாண்திணைக்கு உரியது என்பதை அறியலாம்.

41. தலைமகன் பாங்கற்கு உரைத்தது. 'பாங்கன்' என்றால் நண்பன் என்பது பொருளாகும். செய்யுளில், தலைவன், தன் நண்பனிடம் கூறும் கூற்றுகள் 'தலைமகன் பாங்கற்கு உரைத்தது' எனக் குறிப்பிடப்படும் இப்பாடலில் தலைவன் பாங்கனிடம் தன் துன்பத்தைக் கூறி, அதனைப் போக்குமாறு வேண்டுகிறான்.

கருஞ்சேற்றில் சிக்கிக் கொண்ட வண்டியை மீட்க எருது மிகவும் முயற்சி செய்கிறது; முடியாமல் துன்பம் அடைகிறது. அப்பெண்ணின் தந்தை வண்டியை சேற்றிலிருந்து தள்ளி எருதிற்கு உதவி செய்கிறார். இதைப் பார்த்த தலைவன் தன் நண்பனிடம், "அந்த எருதினைப் போல் நானும் துன்பம் அடைந்துள்ளேன்" என்று கூறுகிறான். இதன் மூலம், "எருதிற்கு அவள் தந்தை உதவி செய்தது போல் எனக்கு நீ உதவி செய்ய வேண்டும்" என்று மறைமுகமாகக் கூறுகிறான்.

42. **பழமொழி விளக்கம் :** ஒருவர் எச்சூழலிலும் பொய் சொல்லமாட்டார். பிறர் பொருளைக் கவர நினைக்கமாட்டார். சீற்றங்களால் இவ்வுலகமே அழியும் நிலை வரினும் தன் நிலையிலிருந்து மாறாமல் அவருடைய கொள்கையில் நிலையாக இருப்பார். இதனை 'ஊழி பெயரினும் தாம் பெயரார்' என்று கூறுவர்.

**வாழ்க்கை நிகழ்வு :** விருதாச்சலத்தில் பிரியா என்ற பெண் வாழ்ந்து வந்தாள். நன்கு படித்த பெண். இளகிய மனம் கொண்டவள். வறுமையிலும் உதவி என்று கேட்டால் தவறாமல் செய்பவள். அவள் ஒருநாள் கோயிலுக்கு சென்று கொண்டிருந்தாள். வழியில் ஒரு பை கிடந்தது. அதை எடுத்து பார்த்தாள். அதில் பணம் மற்றும் சில ஆவணங்கள் இருந்தன. அப்போது அவளுக்கு பணத்தேவை இருந்தது. இந்த பணம் அவள் தேவையை நிறைவேற்றும். ஆனால் அவள் அதை எடுத்துக் கொள்ளவில்லை. காவல் நிலையம் சென்றாள். பணத்துடன் இருக்கும் அந்த பையைக் கொடுத்தாள். பையில் உள்ள ஆவணத்தில் வீட்டு முகவரி இருந்தது. அதைப் பார்த்து உரியவர்களை வரவழைத்து காவலர்கள் ஒப்படைத்தனர். தன் வறுமையிலும் பிரியா நேர்மையாக நடந்து கொண்டாள்.

www.surabooks.com



**நீதி :** நாம் எந்தச் சூழலில் இருந்தாலும் பொய் சொல்லக்கூடாது. பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. உலகம் அழியும் நிலை வந்தாலும் தன் நிலையில் இருந்து மாறக்கூடாது என்பதே இப்பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

(அல்லது)

**பழமொழி விளக்கம்:** தனி ஒருவனால் சாதிக்க முடியாத பல காரியங்களைக் கூட்டு முயற்சியினால் வெற்றி பெறச் செய்ய முடியும் என்பது இப்பழமொழியின் கருத்தாகும்.

**வாழ்க்கை நிகழ்வு :** ஒரு ஊரில் பல சமயத்தார்கள் ஒன்று கூடி வாழ்ந்து வந்தார்கள். அந்த ஊரில் நல்லது கெட்டது எது நடந்தாலும் ஒற்றுமையுடன் செயல்படுவார்கள். இப்படிப் பல வருடங்கள் கழிந்து விட்டன. பிறகு ஒருவருக்கொருவர் சில காரணத்துக்காக வாய்ச் சண்டையாகி, கைச்சண்டையில் போய் பிறகு உயிரைப் பறிக்கக் கூடிய சண்டையாக மாறிவிட்டது. இந்தச் செயலைப் பார்த்து பக்கத்து ஊர்க்காரர்களும் இவர்களை தாழ்வாக நினைத்தார்கள்.

இறுதியில் ஒருவருக்கொருவர் பிரச்சனையில் மாட்டிக் கொண்டு காவல் நிலையம், நீதிமன்றம் என்று போய், தன்னிடம் இருக்கும் பணத்தையெல்லாம் விரயம் செய்து கடைசியில் தன் குடும்பத்தைச் சோகத்துக்குத் தள்ளி விட்டார்கள். பிறகு ஒவ்வொரு சமயத்தாரும் தன் நிலையைத் தெரிந்து கொண்டு, நாம் ஒற்றுமையுடன் இருந்தால் தான் வாழ்க்கையில் செம்மையை அடைவோம் என்றுச் சொல்லி, ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள்.

**நீதி:** "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழிக்கேற்ப தேரினை இழுப்பதற்கும் பல மனிதர்கள் தேவை. அது போல ஒருவர் மட்டும் தேரினை இழுக்க முடியாது என்பது போலக் கூடி வாழ்ந்தால் கோடி நன்மையாகும் என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது.

43. சங்க இலக்கியப் பாடல்கள் ஓர் ஒழுங்குமுறையாகத் தொகுக்கப்பட்டு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இரு பிரிவாக அமைந்துள்ளன. எட்டுத் தொகையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவை அகநூல்களாகும். பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறநூல்களாகும். பரிபாடல் அகமும், புறமும் கலந்த நூலாகும்.

பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை அகநூல்களாகும். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தவை. இவை புறப்பாடல்கள் ஆகும். இவை தவிர மதுரைக்காஞ்சியும் புறப்பாடல் ஆகும். இப்பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் இணைந்து பதினெண்மேற்கணக்கு எனவும் பெயர் பெறும்.

44. அ)

**முன்னுரை :** செய்ந்நன்றி அறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு விளக்கம் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**செய்ந்நன்றி அறிதல் :** தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது. உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் அது உலகத்தின் அளவை விட மிகப் பெரியதாகும். இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலை விடப் பெரிதாகும். ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர். ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது. எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும்; ஒருவர் செய்த உதவியை மறந்து விட்டவர்க்கு உய்வே இல்லை.

**முடிவுரை :** செய்ந்நன்றி அறிதலை திருவள்ளுவர் உணர்ந்து பிறர் அறியும் வண்ணம் உரைத்துள்ளார். அவர்தம் கருத்துகளை ஏற்றுக் கொண்டு, அதன்படி நடந்தால் இவ்வுலகம் நம்மை மதிக்கும்.

(அல்லது)

ஆ) **முன்னுரை:** நெல்லையில் பிறந்து தமது முப்பதாவது வயதில் இந்து மதத்திலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறினார். ஹென்றி ஆல்பர்ட் கிருஷ்ணன் எனத் தன் பெயரை மாற்றிக்கொண்டார். ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்னும் ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது.

**இரட்சணிய யாத்திரிகம் :** இது 3766 பாடல்களைக் கொண்டது. ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் ஆகிய ஐந்து பருவங்களைக் கொண்டது. இக்காப்பியத்தின் குமார பருவத்தில் உள்ள இரட்சணிய சரித படலத்தில் இடம் பெறும் இயேசுவின் இறுதிக்கால நிகழ்ச்சிகள் பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளன. திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த 'நற்போதகம்' எனும் ஆன்மிக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் 13 ஆண்டுகள் தொடராக வெளிவந்தது. இரட்சணிய யாத்திரிகம் 1894ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.

**கிறித்துவக் கம்பரே :** இந்நூலில் கம்ப இராமாயணச் சாயலைப் பல இடங்களில் காணலாம். எனவே இவர் கிறித்துவக் கம்பர் என்று போற்றப்பட்டார். 'ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' இத்தொடரில் இறைமகனின் எளிய நிலையைப் புலப்படுத்துகிறார். அன்பு என்னும் உறுதியான கட்டிலிருந்து விடுபட முடியாமல்தான், எந்த உதவியும் பெற இயலாத ஓர் ஏழையைப் போல அமைதியுடன் நின்றார். கொடியோர் ஒன்று கூடிக் கூறிய இகழ்ச்சி மொழி எனும் கொடிய தீக்கொள்ளியானது மாசில்லாத அருள்நிறைந்த இறைமகன் இதயத்தில் அழுந்தியதாக கவிஞர் குறிப்பிடுகிறார். இறைமகனைக் கொடுமை செய்த அக்கொடியவர்களைக் கண்டு மக்கள் பலவாறாகப் புலம்பினர். 'இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே! இது என்னே!' என்பர்; 'வானம் இடிந்து விழவில்லையே! இது என்னே!' என்பர்; 'கடல் நீர் வற்றிப் போகவில்லையே! இது என்னே!' என்பர். மேலும், 'இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ' என்பர். மக்கள் புலம்பல்களைத் தம் பாடல் மூலம் வெளிப்படுத்தி இருப்பது கம்பனை நினைவுப்படுத்தியது. இங்கு கம்பனும் கிருட்டிணனாரும் ஒரே கொள்கையை வலியுறுத்துகின்றனர். பொல்லாத யூதர்களும் போர்ச் சேவகர் கூட்டமும் எல்லாம் வல்ல இறைமகனை இகழ்ந்து பேசியும் புறக்கணித்தும் வாயில் வந்தபடி சொல்லத்தகாத பழிமொழிகளைக் கூறினர்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

அவர்கள் செய்த பொல்லாங்குகளை எல்லாம் நம் இறைமகன், பொறுத்திருந்தார். அன்பு நிறைந்தவர், ஆர்வம் குறையாதவர், நெகிழ்ச்சி தொடரும், தொண்டில் மகிழ்ச்சி தரும் இவையே மனிதத்தின் இயல்புகளாகும். இம்மனிதத் தன்மையைத் தம் கொள்கையாலும் பேச்சாலும் வாழ்வாலும் வதை பல பட்டும் வெளிப்படுத்தியவர் இயேசு பெருமான் எனப் புகழாரம் சூட்டுகிறார் எச்.ஏ.கிருட்டிணனார்.

**முடிவுரை :** எச்.ஏ.கிருட்டிணனாரின் இந்நூல் பிற சமய இலக்கியங்களைப் போலவே தமிழ் இலக்கிய வளமைக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது.

45. அ)

**சந்தீப் :** ஐயா, வணக்கம். உங்களைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி.

**பசுமைதாசனார்**: சந்தீப் ! வா ! வா !

**சந்தீப் :**ஐயா, சுற்றுச்சூழல் குறித்து சில விஷயங்களை அறிந்துகொள்ள உங்களை நாடி வந்திருக்கிறேன்.

**பசுமைதாசனார் :** நல்லது. சுற்றுச்சூழல் பற்றி நீ அறிய விரும்புவது என்ன? சொல்.

**சந்தீப் :** ஐயா, நெகிழி என்றால் என்ன? சற்று விளக்குங்கள்

**பசுமைதாசனார் :** சரியாக கேட்டாய். நெகிழி அல்லது பிளாஸ்டிக் (Plastic) என்பது ஒரு பொருள். ஏதாவது ஒரு நிலையில் இருந்து பின்னர் இறுகி திட நிலையை அடைவதைக் குறிக்கும் சொல் ஆகும். பிளாஸ்டிக்கோஸ்என்றகிரேக்கச்சொல்லில்இருந்துபிளாஸ்டிக் என்ற சொல் உருவானது. அழுத்தம் தந்தால் வளைந்து கொடுக்காமலும் உடைந்து போகாமலும் இருக்கும் பொருள்கள் நெகிழி ஆகும்.

**சந்தீப் :** ஐயா, நம் ஊர்களில் எங்கு பார்த்தாலும் நெகிழியைப் பயன்படுத்துகிறார்களே அதனால் தீமைகள் ஏற்பட்டு மக்கள் துன்பப்பட மாட்டார்களா?

**பசுமைதாசனார் :** சந்தீப், கட்டாயம் துன்பப்படுவார்கள். நெகிழியை பயன்படுத்துவதால் என்னென்ன தீமைகள் ஏற்படுகின்றன என்பதை பட்டியலிடுகின்றேன் கேள். கால்நடைகள், வனவிலங்குகள் போன்றவை உணவுடன் பிளாஸ்டிக் குப்பையை உட்கொள்வதால் உணவுக்குழாய் அடைபட்டு துன்புறவும், மரணமடையவும் செய்கின்றன. வீட்டிலிருந்து தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மண்ணின் தன்மையைப் பாதிக்கின்றன. நெகிழி குடி தண்ணீர் பாட்டில்கள், குளிர்பான பாட்டில்கள் போன்றவை சாக்கடைகளை அடைத்து கொண்டு பல இன்னல்களை ஏற்படுத்துகின்றன. நம் அன்றாட வாழ்வில் தூக்கியெறியப்படும் பிரிக்காத குப்பைகளினால் கொசுக்களால் பரவும் நோய்கள் உருவாகின்றன. புரிந்ததா? இப்படி நெகிழியின் தீமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

**சந்தீப் :** இவ்வளவுதானா? இன்னும் நெகிழியின் தீமைகள் உள்ளனவா?

**பசுமைதாசனார் :** நெகிழியை நாள்தோறும் பயன்படுத்தி சுற்றுச்சூழலை பாதிப்படையச் செய்கின்றனர் நம் மக்கள். மேலும் நெகிழியைப் பயன்படுத்துவதால், பல்வேறு நோய்களும் பரவுகின்றன.

**சந்தீப் :** ஐயா, கேன்சர் போன்ற வியாதியை உருவாக்கும் தன்மையை நெகிழி கொண்டுள்ளதா?

**பசுமைதாசனார் :** ஆம் தம்பி, நெகிழியால் கேன்சர் நோயும் வரும்.

**சந்தீப் :** நெகிழி மாசுபாட்டைத் தடுக்கும் தீர்வுகளைக் கூறுங்கள் ஐயா.

**பசுமைதாசனார் :** நெகிழிப் பைகளுக்கு மாற்றாக சணல் மற்றும் துணி போன்ற எளிதில் மட்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தலாம். தண்ணீர்குடுவைகளுக்குமண்பாண்டங்கள்,உலோகங்கள் ஆகியவைகளால் செய்யப்பட்ட குடுவைகளைப் பயன்படுத்தலாம்.வியாபாரிகள் நெகிழிக்கு மாற்றாகப் மட்கும் பொருட்களை பயன்படுத்த முயற்சி செய்யலாம். உணவு விடுதிகளில் இயற்கையாக கிடைக்கும் பொருள்களால் ஆன கோப்பைகள் மற்றும் தட்டுக்களைப் பயன்படுத்த அறிவுறுத்தலாம்.

**சந்தீப் :** ஐயா, நான் கேள்விப்பட்டேன்... தமிழக அரசும் நெகிழியைப் பயன்படுத்த தடை விதித்துள்ளது என்கிறார்களே, உண்மையா?

**பசுமைதாசனார்:** ஆம். சந்தீப். தமிழக அரசு, அரசு ஆணைகளைப் பிறப்பித்து நெகிழியைப் பயன்படுத்த தடை விதித்துள்ளது.

**சந்தீப் :** ஐயா இவ்வளவு நேரம் நெகிழியின் தீமைகள் மற்றும் அதை தடுப்பதற்கான வழிகளைக் கூறியமைக்கு மிக்க நன்றி. முதலில் நானும் என்னைச் சார்ந்தவர்களும், இச்சமூகத்தில் நெகிழியின் பயன்பாட்டைத் தவிர்க்கப் பாடுபடுவோம்.

(அல்லது)

ஆ) கரூரை அடுத்த புகளூரில் உள்ள ஆறுநாட்டான் என்ற குன்றின் மீது உள்ள கல்வெட்டு குறித்த செய்தியை அறிந்து ஐராவதம் மகாதேவன் அதனை ஆய்வு செய்தார். பிராம்மி வரிவடிவத்தில் நான்கு வரிகளில் அந்தக் கல்வெட்டில் வாசகங்கள் உள்ளன என்பதையும் அதனைப் படித்தறிய முடியவில்லை என்பதையும் இந்திய அரசின் தொல்பொருள் துறையினர் வெளியிட்ட 1927-28 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை மூலம் அறிந்து கொண்டார்.

மேலும் அந்த ஆண்டறிக்கையில் 'ஆதன்' என்ற சொல் காணப்படுவதால் அது சேரமன்னர்களைப் பற்றியதாக இருக்கலாம் என்ற குறிப்பும் காணப்பட்டது.

ஐராவதம் மகாதேவன் தன் உதவியாளர்களுடன் அங்கு சென்ற பார்த்த போது முதலிலும் முடிவிலும் ஓரிரு எழுத்துகள் தவிர ஏனையவை படிக்கக் கூடியதாக இருந்தன.

"......... அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கோன் மகன் (இ) ளங்
கடுங்கோ (இ) ளங்கோ ஆக அறுத்த கல்"

என்ற வரிகளை உடைய கல்வெட்டின் மூலம் கிடைத்த செய்திகளை ஐராவதம் மகாதேவன் வெளியிட்டார்.

**கல்வெட்டு கூறும் செய்திகள்:**

(i) யாற்றூர் என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான செங்காயபன் வசித்த உறையுள் அந்த இடமாகும்.

(ii) கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்களால் அக்கல்வெட்டு பொறிக்கப்பட்டது.

(iii) அக்கல்வெட்டு ஏறத்தாழ கி.பி. (பொ.ஆ) 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

(iv) அக்கல்வெட்டில் காணப்பட்ட மன்னர்களின் பெயர்கள் பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட 6,7 மற்றும் 8 ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று ஐராவதம் மகாதேவன் கூறினார்.

www.surabooks.com



(v) அக்கருத்தை மறுத்த மாணவர் ஒருவர். அம்மன்னர்கள் முறையே 7,8 மற்றும் 9 ஆவது பாட்டுடைத் தலைவர்கள் எனக் கூறினார். மாணவர் கூறிய கருத்தே சரியென்பதை உணர்ந்து கொண்ட மகாதேவன் அவர்கள், முதலாம் உலகத் தமிழ் மாநாட்டில், மாணவரின் கருத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தார்.

(vi) ஐராவதம் மகாதேவனின் இந்த அரியக் கண்டுபிடிப்பினால், சங்ககாலத் தமிழ் மன்னர்களைப் பற்றிய புறச் சான்றுகள் எதுவுமே கிடைக்கவில்லை என்ற குறை நீங்கியது.

46. அ)

**முன்னுரை:**

'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன எவை என்பதனை இக்கட்டுரையில் காண்போம்.

**சாலை விபத்து பற்றி ஒரு கண்ணோட்டம் :**

நம் நாடுதான் உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு. ஏறக்குறைய 55 இலட்சம் கிலோமீட்டர் சாலைகள் நம் நாட்டில் உள்ளன. 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் நம் நாட்டில் உள்ளன. ஓர் ஆண்டில் ஏறக்குறைய 5 இலட்சம் விபத்துகள் நடக்கின்றன. தமிழ்நாடுநான் இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக இருக்கிறது.

**சாலை விபத்தைத் தடுக்கும் முறைகள் :**

சாலையின் வகைகள், மைல் கற்களின் விவரங்கள் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும். போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக்காவலர்களின்சாலைஉத்தரவுகளுக்கும் ஏற்பச் சாலையைப் பயன்படுத்த வேண்டும். நடைமேடை, நடைபாதையைப் பயன்படுத்துபவர்களையும் சாலையைக் கடப்பவர்களையும் அச்சுறுத்தக்கூடாது.

சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. தேவையான இடங்களில் சரியான சைகையைச் செய்ய வேண்டும். எதிரில் வரும், கடந்து செல்ல முற்படும் ஊர்திகளுக்கும் வழிவிட வேண்டும். தேவையெனில் வேகம் குறைத்து இதர வாகனங்களுக்குப் பாதுகாப்புடன் வழிவிட வேண்டும். பிற ஊர்தி ஓட்டிகளுக்கு விட்டுக் கொடுப்பது சிறந்தது. இதர சாலைப் பயனாளிகளை நண்பராக எண்ண வேண்டும்.

பள்ளி மாணவர்களிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன. குறியீடுகளை மூன்றாகப் பிரித்து அறியலாம். அவையாவன: உத்தரவுக் குறியீடுகள், எச்சரிக்கைக் குறியீடுகள், தகவல் குறியீடுகள்.

**முடிவுரை:**

சாலை விதிகளைப் பின்பற்றிப் பயணங்களை மேற்கொள்ளும் பொழுது விபத்தில்லாத தமிழ்நாடு உருவாகும்.

(அல்லது)

ஆ) 'நடிப்புலகின் சக்கரவர்த்தி' என்று அனைவராலும் போற்றப்படுகின்ற நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்கள் பழகுவதற்கு மிகவும் எளிமையானவர். அவரின் இயற்பெயர் சின்னையா கணேசன். விழுப்புரத்தில் பிறந்த அவர், சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற தனது தந்தையை தனது ஒன்பதாவது வயதில்தான் முதன் முதலில் பார்த்தார். தனது ஐந்தாவது வயதிலேயே வறுமை காரணமாக நாடகக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். படிப்படியாக உயர்ந்து திரையுலகிற்கு வந்தார். நடிப்பின் இமயம் என்று போற்றப்பட்டார்.

அண்ணாதுரையின் நாடகத்தில் சத்ரபதி சிவாஜியாக வேடமேற்று நடித்தார். அவர் நடிப்பைக் கண்டு வியந்த ஈ.வெ.ரா. பெரியார், 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டார். அன்று முதல் அந்தப் பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது. 'பராசக்தி' என்ற திரைப்படம்தான் அவர் நடித்த முதல் திரைப்படம் ஆகும். திரைப்படத்தில் நடித்தாலும், நாடக உலகை மறக்காமல், நாடகங்களிலும் நடித்து வந்தார். திரைப்படத்தை விட நாடகங்களையே அவர் மிகவும் நேசித்தார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற திரைப்படம் அவரை உலகப் பிரசித்தி பெற்ற நடிகனாக மாற்றியது. இராஜராஜ சோழன், வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், சிவபெருமான், அப்பர், சுந்தரர், கர்ணன், பாரதியார் என்றதுமே நம் கண்முன்னே வந்து நிற்பது அந்தந்த கதாபாத்திரங்களாகவே மாறிவிட்ட சிவாஜியின் உருவமே ஆகும். அவர் நடிக்கும் போது 'சிவாஜி கணேசன்' என்ற நடிகர் நம் கண்முன்னே இருக்கமாட்டார். அந்தக் கதாபாத்திரம்தான் நமக்குத் தெரியும்.

ஒருமுறை இயக்குநர் ராஜீவ் நாத் சிவாஜி அவர்களிடம் மலையாளப் படத்திற்கான கதையினை கூற அவரின் வீட்டிற்குச் சென்றார். இயக்குநர் கதையினை கூறும்போது உடன் சென்ற பாலசந்திரன் சுள்ளிக்காடு என்பவர் சிவாஜியின் முக அசைவுகளை கூர்ந்து கவனித்து பின்வருமாறு அதை குறிப்பிடுகிறார். "கதையினை கேட்கும் சிவாஜி அவர்களின் தோற்றம், ஊழித்தாண்டவமாடும் ருத்திரன், கவச குண்டலம் கொடுத்தகர்ணன், காளமேகத்தில்கவிதைததும்பச்செய்த கவிகுல குரு காளிதாசன், அமிழ்தத் தமிழ்மொழியின் உன்னதக் கவியான பாரதி, தாய்த்தமிழ் மண்ணின் வீரதீரச் சந்ததியான வீரபாண்டிய கட்டபொம்மன், சோழ குலோத்துங்கச் சூரியனான ராஜராஜ சோழன், என நடிகர் திலகத்தின் கதாபாத்திரங்கள் தன் மன அடுக்குகளில் மின்னி மறைந்ததாக" கூறியுள்ளார். எனவே சிவாஜி அவர்களுக்கு 'நடிகர் திலகம்' என்ற பட்டம் பொருத்தமானதே.

47. அ)

'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

**பாவகை : கலிவிருத்தம்**

ஆ) சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

☆☆☆

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000